27.06.2024

O.S.No.128/2018

வா.சா.1.திரு.சின்னாரு என்ற அடைக்கண் த.பெ.அடைக்கண்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. SOP No.85/93 வழக்கு நடைபெற்று கொண்டிருக்கும் போதே எனது தாய்மாமாவான பி.அ.நயினான் இறந்து போனார் என்றால் சரிதான். அந்த வழக்கில் இந்த வழகக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் உள்பட பிற சொத்துக்களையும் சேர்த்து உயில் எழுதி வைத்துள்ளதாக எனது தாய்மாமாவான பி.அ.நயினான் ஆட்சேபணை தெரிவித்துள்ளார் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் உயில்தான் எனது தாய்மாமாவான பி.அ.நயினான் எழுதி வைத்த அசல் உயில் என்றால் சரியல்ல, அவர் உயில் எதுவும் எழுதி வைக்கவில்லை. எனக்கு தான் பி.அ.அடைக்கண் என்பவர் சொத்துக்களை எழுதிக்கொடுத்துள்ளார். 26.10.1994 தேதியிட்ட அசல் உயில் ஆவணத்தினை பற்றி எனது தாய்மாமாவான பி.அ.நயினான் என்பவர் SOP No.85/93 வழக்கில் குறிப்பிட்டு சொல்லி ஆட்சபேணை செய்திருந்தார் என்றாலும், அந்த விவரத்தினை நான் தெரிந்து கொண்டு இந்த வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. எனது பிராதிலோ, நிருபணவாக்குமூலத்திலோ வழக்கு சொத்தானது எனது தாய்மாமாவான காலம் சென்ற பி.அ.நயினான் எழுதிக்கொடுத்ததன் அடிப்படையில் எனக்கு பாத்தியம் என்று, நான் சொல்லவில்லை என்றால் சரிதான், அவர் எனக்குசொத்து எதுவும் எழுதிக்கொடுக்கவில்லை.

2. தாவா சொத்தில் இருந்த வீட்டை இடித்த கதவு என்னிடம் இருப்பதான நான் சொல்வதால் அந்த கதவு எண் என்ன என்று ஏற்கனவே எனது குறுக்கு விசாரணையின் போது கேட்டுள்ளதால் தற்போதாவது அந்த கதவு எண்ணை நான் பார்த்து வந்துள்ளேனா என்றால் இல்லை. பொதுவாக வீடு இல்லாமல் வீட்டுவரி போடமாட்டார்கள் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வரி ரசிது வழக்கு சொத்திற்கு நடப்பு ஆண்டில் இந்த பிரதிவாதி நயினான் பெயரில் போடப்பட்ட வரி ரசிது என்றால் நான் வரி எதுவும் செலுத்தவில்லை, அவர்கள் போட்டுள்ளார்கள். தாவா சொத்திற்கு பிரதிவாதி வரி செலுத்தி வருகிறார் என்றால் சரிதான். ஏற்கனவே என்னால் தாக்கல் செய்யப்பட்ட அசல் வழகக்கு எண்.132/2012 மற்றும் அசல் வழக்கு எண்.308/2014 ஆகிய வாரிசுதாரர் கோரிய வழக்குகளில் இந்த தாவா சொத்தினை பொறுத்து, பெயர் மாற்றம் ஏற்படவேண்டி வாரிசு சான்றிதழ் கேட்பதற்காக அந்த வழக்கில் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

3. வழக்கு சொத்தில் வீடு உள்ளதா, இல்லையா என்பததை நீதிமன்ற வழக்கறிஞர் ஆணையரை நியமனம் செய்து பார்த்தால் தெரிய வரும் என்றால் தெரிய வரும், அங்கு வீடு இல்லை. இந்த வழக்கு தாக்கல் செய்த தேதியில் பிரதிவாதிக்கு 76 வயது என்றால் சரிதான், அவர் நன்றாகத்தான் உள்ளார். பிரதிவாதி என்னை இடையூறு செய்யவில்லை என்றாலும் சரியல்ல, அவருக்கு பதிலாக அவரது மகன் என்னை இடையூறு செய்து தாக்கி விட்டார். 1994ம் வருடத்திய எனது தாய்மாமாவான பி.அ.நயினான் எழுதி வைத்த உயிலின் அடிப்படையில் தாவாசொத்து பிரதிவாதிக்கு பாத்தியம் என்று என்னிடம் பிரச்சினை செய்து வருகிறார்கள் என்றால் சரிதான், ஆனால் உயில் எதுவும் எழுதி

வைக்கவில்லை. தாவா சொத்தில் பிரதிவாதிகள் உரிமை கோருவதால் அது தவறு என கூறி எனது சார்பில் மாற்று பரிகாரம் எதுவும் கேட்கவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிக்கு எனது எனது தாய்மாமாவான பி.அ.நயினான் எழுதி வைத்த 1994ம் வருடத்திய உயில் உண்மையானது என்றாலும், அதன் அடிப்படையில் தாவா சொத்து அவர்களுக்கு பாத்தியப்பட்டது என்றாலும், நான் பெற்ற வாரிசு சான்றிதழ் அடிப்படையில் தாவா சொத்திற்கு எனது பெயரில் பட்டா மாற்றம் செய்து கொண்டு, வீண் தாவா செய்து வருகிறேன் என்றால் சரியல்ல.

4. தாவா சொத்தினை நான் ஒருபோதும் அனுபவித்ததில்லை என்றாலும், தாவா சொத்தில் உள்ள வீட்டில் பிரதிவாதிதான் குடியிருநது அனுபவித்து வருகிறார் என்றாலும் சரியல்ல. தாவா சொத்தின் உண்மையான உரிமையாளரான பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி நான் தாக்கல் செய்திருக்கும் இந்த தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல. தாவா சொத்தினை பொறுத்து விளம்புகை பரிகாரம் மற்றும் சுவாதீன மீட்பு பரிகாரம் கோராமல் குறைவாக நீதிமன்ற கட்டணம் செலுத்தவேண்டும் என்பதற்காக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும் கோரி தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.